RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s217

OPEN ACCESS

# குறும்பர் இன மக்களின் இறை வழிபாடு

ப. முருகன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசுக் கல்லூரி, பாலக்காடு, கேரளா-678104, இந்தியா

# Worship of Kurumba Tribal

P. Murugan [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Palakkad, Kerala-678104, India.

* Corresponding Author: drpmkjm@gmail.com

Received: 23-03-2021
Revised: 05-01-2022
Accepted: 13-01-2022
Published: 28-02-2022

Check for updates

## ABSTRACT

Kurumbas of Attappady area has the tradition of worshipping the nature and make offering to the land. As Attappady is a hilly region, they follow the same lifestyle of people living in other hilly areas. They live in harmony with nature and worship earth as their God. They do not give importance to religion and they are interested in worshipping the nature. Thus, this people differ from people in other hilly areas. Nature worship was given priority by the ethnic minorities. It is customary for these people to worship the earth and the woman. Plowing, hunting and beekeeping are the main occupations of these people. Knowing the special nature of the forests, the forest deities are worshiped, and the deities and deities are worshiped. They can be seen in a position where no religion is prioritized. Worship of Vanjiyamman is also said to be the worship of Kannaki. The uniqueness of these people is that they live a life in harmony with nature. Nature worship was given priority by the ethnic minorities. It is customary for these people to worship the earth and the woman. Plowing, hunting and beekeeping are the main occupations of these people. Knowing the special nature of the forests, the forest deities are worshiped, and the deities and deities are worshiped. They can be seen in a position where no religion is prioritized. Worship of Vanjiyamman is also said to be the worship of Kannaki. The uniqueness of these people is that they live a life in harmony with nature.

**Keywords:** Glossary Deivam, Solaiyamma, Vanjiyamman, Malleeswaran

## முன்னுரை

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் இயற்கைச் சீற்றங்களைக் கண்டு அஞ்சினான். தனக்கு அச்சம் தரும் பொருட்களை எல்லாம் தனது வழிபாட்டுப் பொருளாக்கிக் கொண்டான். இவ்வாறு மனித மனத்தில் ஏற்பட்ட அச்ச உணர்வே வழிபாட்டிற்கு அடித்தளமாக அமைந்தது என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

“வழிபாடு என்ற சொல் வழிபடு என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்த தொழிற்பெயராகும். வழிபடு என்ற சொல்லிற்கு வணக்கம், வழியிற் செல்லுகை, பின் பற்றுகை, பூசனை, வழக்கம் என்று பல்வேறு பொருள்கள் இருப்பதை அகராதிகள் சுட்டுகின்றன (Ulagaveerappan, 2009).

ஆகவே ஏதோ ஒரு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டும்,தனக்கும் மேலான சக்தி ஒன்றுண்டு என்று கருதி அதனின் நின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அச்சக்தியைவணங்கினான் அதுவே வழிபாடாக உருமாற்றம் பெற்றிருக்கலாம்.

ஆதிகால மனிதன் இயற்கையின் ஆற்றலை உணர்ந்தான். அதன் காரணத்தை அறிந்து கொள்ளாமல் அவற்றுக்குப் பின்னால் ஏதோ சக்தி இருக்கிறது என்று எண்ணி அவற்றை வழிபட எண்ணினான். இதனை மனித உருக் கற்பனை என்று மானிடவியலார் சுட்டுவர். இத்தகைய இயற்கை வழிபாடே மனிதன் அறிந்த முதல் வழிபாடாகும். மனிதன் தனக்கு நலனளிக்கவும் தனக்கு அளிக்கப்பட்ட நலனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டும் இயற்கையை வணங்கத் தொடங்கினான் என்ற முனைவர் க. ப. அறவாணன் கூற்றையும், தெய்வ வழிபாடு தோன்றுவதற்குக் காரணம் பகைவர்களைப் பற்றிய அச்ச உணர்வே என்ற கொசாம்பியின் கூற்றையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். காலச் சுழற்சியால் இயற்கைக்கு உருவம் கற்பிக்கப்பட்டவுடன் பல தெய்வ வணக்கம் தோற்றம் பெற்றிருக்கலாம். புராண மக்கட் கூட்டத்தினர் கருவளத்தையும் பயிர் வளத்தையும் ஒருங்கே பெறுவதற்காகவே மந்திரங்களையும் கையாண்டனர். அதன் தருக்க ரீதியான முடிவாக, வழிபாடு தோன்றியிருக்கலாமெனக் கருதுகிறார். அன்று தோன்றிய வழிபாடுகள் பிற்காலத்தவரால் இயற்கை வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு, பெருந் தெய்வ வழிபாடு, முன்னோர் வழிபாடு என்றும் பல்வேறு வழிபாட்டு மரபுகள் தோன்றலாயின.

## இயற்கை வழிபாடு

இயற்கை வழிபாடு குறித்து மாக்ஸ் முல்லர் பழங்குடி மக்களின் வழிபாட்டு முறையாக காலந்தோறும் இயற்கை வழிபாடே இருந்து வருகின்றது. இயற்கைத் தோற்றங்களாகிய கதிரவன், சந்திரன், மழை, மின்னல் முதலியவற்றைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம், என்னும் உள்ளத்து உணர்வுகளே சமயம் தோன்றக் காரணமாயின எனக் குறிப்பிடுகிறார் (Sakthivel, 2006).

சிலப்பதிகாரம் வழிபாட்டு முறைப்பற்றிக் கூறுகையில்,,

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்

கொங்கு அலர் தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்று

அம்கண் உலகு அளித்தலான்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

காவிரி நாடன் திகிரி போல் பொன்கோட்டு

மேரு வலந் திரிதலான்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்"

என எடுத்துரைத்தல் பழங்கால மக்களின் இயற்கை வழிபாட்டு முறைகளை, சிலம்பின் மூலம் அறிந்துக்கொள்ளலாம் (Vengadachalam, 2007).

காடு, மலைப் பகுதிகளில் வாழ்கின்ற குறும்பர் இன மக்களும் சூரியன், மழை போன்ற இயற்கையின் ஆற்றலைக்கண்டுஅஞ்சி அவற்றை தெய்வமாக வணங்கி வருகின்றனர். இவ்வியற்கை வழிபாட்டின் வெளிப்பாடு இவ்வின மக்கள் சோலைகளை “சோலையம்மா” என்ற தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

காட்டு விலங்குகளோடு ஒன்றி வாழும் இவர்கள் விலங்குகளைக் கண்டு அஞ்சுவதில்லை. இந்தக் கொடிய விலங்குகள் எங்களை ஒன்றும் செய்யாது என்றும்,சோலையம்மா எங்களைக் காப்பாள் என்ற நம்பிக்கையுடன் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். மழை குறைவான காலங்களில் மழையை வேண்டிஇம்மக்கள் வழிபாடு நடத்துவதும் உண்டு. இயற்கையே மனிதனின் தேவையைப் பூர்த்திசெய்யும் தெய்வம். இதை உணர்ந்த மக்கள் இயற்கையை வழிபடத் தொடங்கினார்கள்.குறும்பர் இனமக்கள் இதற்குத்தக்கச் சான்றாக விளங்குகிறார்கள் எனலாம்.

## சிறுதெய்வ வழிபாடு

நாட்டுப்புற மக்களிடமும், குறும்பர் இனப் பழங்குடி மக்களிடமும் சிறு தெய்வ வழிபாடு முக்கிய இடத்தைப் பெறுகிறது (Sakthivel, 2006). இவர்கள் கரு தெய்வம், வஞ்சியம்மன், மாரியம்மன், மல்லம்மா, சுங்குலம்மா போன்ற தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். கரு தெய்வமே இவர்களது குல தெய்வமாகும்.

குறும்பரின மக்கள் தெய்வங்களைத் தரையில் வைத்து வழிபடுவதைக் குற்றமாகக் கருதுவதால் மூங்கிலால் சிறு தேர் போலச் செய்து அதனுள் தெய்வத்தை வைத்து வழிபடுகின்றனர்.

செவ்வாய், வெள்ளி போன்ற நாட்களை வழிபாட்டுக்கு உகந்த நாட்களாகக் கருதுகிறார்கள். இந்த நாட்களில் தெய்வத்திற்கு விளக்கு வைத்தும், பூஜை செய்தும் வழிபட்டு வருகின்றனர். தெய்வ உருவங்களை வெள்ளி அல்லது செம்புத் தகட்டினால் செய்து அந்த உருவத்தை வழிபடுகின்றனர். கல்லால் செய்தச் சிற்பங்களைப் பெரும்பாலும் பயன்படுத்துவதில்லை.

ஆடி மாதத்தில் கரு தெய்வத்திற்கு சிறப்பு வழிபாடு நடத்துகின்றனர். விளைச்சல் நன்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக இவ்வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. மூப்பன், மண்ணுக்காரன், பண்டாரி, குறுந்தலா ஆகிய நால்வரின் தலைமையில் வழிபாடுகள் நடைபெறும். இதில் வழிபாடு நடத்தும் உரிமை மண்ணுக்காரனுக்கு உரியது. இவ்வின மக்கள் அனைவரும் இவ்வழிபாட்டில் கலந்து கொள்வார்கள். வழிபாட்டுச் செலவு முழுவதையும் மூப்பனே ஏற்றுக்கொள்வார்.

சித்திரை மாதம் விதை விதைக்கும் காலம். எனவே சித்திரை முதல் நாளை வழிபாட்டுக்குரிய முக்கிய நாளாகக் கருதுகின்றார்கள். காடுகளைச் செம்மைப்படுத்தி வைப்பர். சித்திரை வழிபாட்டுக்குப் பின்னரே விதைப்பர். கேரளாவில் இவ்வழக்கம் இன்றும் காணப்படுகிறது.

அறுவடைக் காலத்தில் வழிபாடு நடத்துவது உண்டு. தானிய அறுவடையின்போது புத்தரிசியிட்டுப் பொங்கல் வைத்து வழிபாடு செய்கின்றனர். அறுவடையன்று மண்ணுக்காரனிடம் சிறிது கதிர்களை அறுத்து வரச் சொல்வர். அவர் அறுத்து வந்த புத்தரிசியிலேயே பொங்கல் வைப்பர். அன்று அறுவடை நடைபெறாது. கரு தெய்வத்துக்கு வழிபாடு நடத்திய பின்னரே பிற வேலைகளைச் செய்யத் தொடங்குவார்கள். கரு தெய்வம் என்பது இவர்களது வேண்டுகோளைக் கருணையுடன் கேட்பவள் என்பதால் கருணை தெய்வம், கரு தெய்வம் என்று மருவியிருக்கலாம் எனக் கருதலாம்.

## வஞ்சியம்மை

கரு தெய்வ வழிபாடு நடைபெறும் அன்றே வஞ்சியம்மனுக்கும் வழிபாடு நடைபெறும். வஞ்சியம்மன் என்பது கண்ணகி வழிபாடாகவும் கூறுகின்றனர். கண்ணகியைப் பார்த்த குன்றக் குறவர்கள் அவளைத் தங்கள் தெய்வமாக ஏற்று வழிபட்ட செய்தியை,

"இவள் போலும் நம் குலக்கோர்

இருந் தெய்வம் இல்லை ஆதலின்"

என்ற சிலப்பதிகார அடிகள் குறிப்பிடுகின்றன (Vengadachalam, 2007). எனவே இங்கு வசிக்கும் குறும்பர் இன மக்களும் குறவர் இன மக்களும் ஒருவரே என்ற கருத்தும் நிலவுவதால் வஞ்சியம்மை என்ற பெயரில் கண்ணகியை வழிபட்டு வருகிறார்கள் என்ற கருத்தும் நிலவுகிறது.

## முன்னோர் வழிபாடு

குறும்பர்கள் மூதாதையரை வழிபடுவதைத் தங்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். " காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்த ஆதிமனிதன் குழுவாகவும், திரளாகவும் வாழ்ந்து வந்தான். இவ்வாறு வாழ்ந்து வந்த மனிதன் திடீரென்று இறந்து விட்டதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான். இறப்பிற்குப் பின்னர், இரவில் அவர்களைக் கனவின் கண்டான். கனவின் விளக்கம் தெரியாத பண்டைய

மனிதன் இறந்தவனை வணங்கத் தலைப்பட்டான் (Ulagaveerappan, 2009). குறும்பர் இன மக்கள் இறந்தவர்கள் தங்கள் கனவில் வருவதைப் பெரும் பாக்கியமாகக் கருதினர். அமாவாசை நாட்களில் இறந்தவர்களுக்குப் படையல் வைத்தும் காக்கைக்கு உணவு வைத்தும் வழிபடும் வழக்கம் இம்மக்களிடம் காணப்படுகிறது.

“ஓரிரு மனித உருவங்கள் பதிக்கப்பட்ட பொன் தகட்டினை வைத்துள்ளனர். இவற்றில் பொற் கொல்லர்கள் உருக்கு வார்ப்பின் துணைகொண்டு உருவம் பொறித்துத் தருகின்றனர். இவற்றை வீட்டில் வைத்திருப்பர். அல்லது பெண்கள் தங்கள் கழுத்தில் அணிந்திருப்பர். இறந்தவர் சமூகத்தில் குறிப்பிடத்தக்கவராயின் சிறு தகட்டுக்குப் பதிலாகப் பெரியதொரு தட்டே அவர் நினைவாக வைக்கப்படும்” (தென்னிந்திய குலங்களும் குடிகளும் தொகுதி .4) என்று குறிப்பிடுகிறார் (Edgar Thurston, 2007).

### பெருந்தெய்வ வழிபாடு

சிறுதெய்வ வழிபாடு இவ்வின மக்களிடம் முக்கிய இடம்பெற்றிருந்தாலும் சிவன், முருகன், திருமால் போன்ற பெருந் தெய்வங்களையும் வழிபட்டு வந்தனர். முதற்பொருளான நிலத்தின் பாகுபாட்டைப் பற்றிக் கூறுகையில்,

”மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்

சொல்லிய முறையான் சொல்லவும் படுமே”

ஐவகை நிலப்பாகுபாட்டையும் அந்நிலத்திற்குரிய தெய்வங்களைப்பற்றியும் குறிப்பிடுகிறார் (Elampuranar, 2009). குறிஞ்சி நிலக் கடவுளான முருகனை குறும்பர் இன மக்கள் மிகவும் போற்றி வழிபட்டு வருகின்றனர். பால் காவடி எடுத்துச் சென்று முருகப் பெருமானை வழிபட்டு வரும் வழக்கமும் இவர்களிடையே காணப்படுகிறது. முருகன், திருமால் வழிபாடு காணப்படினும், சிவ வழிபாட்டிற்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

## சிவ வழிபாடு

குறும்பர்கள் சிவராத்திரியை மிகவும் விசேசமான நாளாகக் கருதுகின்றனர். சிவரத்திரியன்று கரு தெய்வத்திற்கு வழிபாடு நடத்துவர். கரு தெய்வ வழிபாடு முடிந்தவுடன் அனைவரும் செம்மண்ணூரிலுள்ள சிவன் கோயிலுக்குச் செல்வர். அட்டப்பாடியிலுள்ள குறும்பர், இருளர், முதுவர் போன்ற அனைத்துப் பழங்குடி மக்களும் சிவராத்திரியன்று செம்மண்ணூர் மல்லீஸ்வரன் கோயிலுக்குத் தவறாமல் சென்று வழிபட்டு வருவர்.

செம்மணூரில் இரண்டு கோயில்கள் காணப்படுகின்றன. அதில் கீழாக உள்ள கோயில் இருளர்களுடையது. மலை மேலே உள்ள கோயில் குறும்பருக்கும் முதுவருக்கும் உரியது. மல்லீஸ்வரன் கோயிலில் முக்கிய வழிபாட்டு நிகழ்ச்சியாக மலையில் சென்று விளக்கு வைக்கும் நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

விளக்கு வைக்கச் செல்பவர்கள் சிவராத்திரிக்குமுன் ஏழு நாட்கள் விரதம் இருக்கத் தொடங்குவர். விரதம் இருக்கும் நாட்களில் அவர்கள் வீட்டிற்குச் சென்று உணவு உண்பதில்லை. விரதம் இருப்பவர்கள் ஒன்றாகச் சேர்ந்து குடிசை அமைத்து உணவு சமைத்து உண்டும், அங்கேயே தங்கியும் இருப்பார்கள். காலையும், மாலையும் நீராடிவிட்டு மிகுந்த பக்தியுடன் சிவனை வழிபட்டு

வருவர். அந்த ஏழு நாட்களை மிகப் புனிதமானதும், தூய்மையானதுமான நாட்களாகவும் கருதுகின்றனர்.

விளக்கு வைக்கும் உரிமை குறும்பர் இன மக்களுக்கே உரியது என்றும், குறிப்பாக, பெட்டிக் கல்லார், அப்பனூர் கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கே இந்த உரிமை உள்ளது என்றும் கூறுகின்றனர். ஒரு ஆண்டு பெட்டிக் கல்லார் ஊர் மக்கள் விளக்கு வைக்கச் சென்றால் அடுத்த ஆண்டு அப்பனூரைச் சேர்ந்தவர்கள் விளக்கு வைக்கச் செல்வார்கள். இந்த நடைமுறை பல ஆண்டுகளாக நடந்து வருகிறது என்பதை ஆனவாய் உண்ணிக்கிருஷ்ணனின் கூற்று வழி அறிய முடிந்தது.

சிவராத்திரியன்று மாலை 6 மணிக்கு கோயிலைச் சுற்றியுள்ள மலையின் நான்கு புறங்களிலும் விளக்குகள் தென்படும். இந்த விளக்கைப் பார்ப்பதைப் புண்ணியச் செயலாகக் கருதுகின்றனர். சபரி மலையில் தை மாதம் முதல் தேதி மகர விளக்குத் தென்படுவதைக் கண்டு பக்தர்கள் பக்திப் பரவசம் அடைவதைப் போல இங்கும் மல்லீஸ்வரன் கோயில் தீபம் கண்டு பழங்குடிகள் மன நிறைவு அடைகின்றனர்.

சபரி மலையில் விளக்குத் தோன்றும் விதத்தைத் தெளிவாக யாரும் கூறுவதில்லை. ஆனால் இங்கு வசிக்கும் பழங்குடி மக்களே மலைக்குச் சென்று விளக்கு வைத்து வருகின்றனர் என்பதை யாவரும் அறிவர். எனினும் மலையில் தோன்றும் ஒளியைத் தெய்வமாகக் கருதி அனைவரும் வழிபட்டு வருகின்றனர்.

விளக்கு வைப்பதற்கு விரதமிருந்து இருபது பேர்கள் செல்வார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றதும் அதில் இரண்டு பேர் மட்டுமே செல்வர். இவர்கள் இருவரும் மலையில் நான்கு புறங்களிலும் சென்று விளக்கு வைத்து வருவர். அதுவரை உடன் சென்றவர்கள் அவர்கள் வரும்வரை அவ்விடத்திலே இருப்பர். விளக்கு வைக்கச் செல்லும்போது பால், பழம், சர்க்கரை, நெய் திரி போன்ற பொருட்களைக் கொண்டு செல்வர். விளக்கு வைக்கச் செல்பவர்கள் நெடுந்தூரம் மலையில் செல்ல வேண்டியுள்ளதால் பால் பழம் முதலிய பொருட்களைக் கொண்டு சென்று அதனைத் தங்களது உணவாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

சாமூதிரி என்ற அரச பரம்பரையினர் சிவராத்திரியன்று நெய்யும், திரியும் செம்மண்ணூர் கோயிலுக்குக் கொடுத்து வருவதாகவும் அதைக் கொண்டு சென்றுதான் விளக்கேற்றுவர் என்றும் கூறுகின்றனர். சாமூதிரி என்ற அரச பரம்பரையினர் கோழிக்கோட்டுப் பகுதியையும் அதற்கு அடுத்த பகுதிகளையும் ஆட்சி புரிந்த அரச பரம்பரையினராவர். ஒருவேளை இந்தப் பகுதியையும் கீழடக்கி ஆட்சி புரிந்திருக்கலாம். எனவே இவர் ஆட்சிக் காலத்தில் நெய்யும் திரியும் தொடர்ந்து கொடுத்து வந்திருக்கலாம். ஆனால் இன்று இம்மாதிரியான வழக்கம் காணப்படுவதில்லை. கேரளத்தில் மன்னர் ஆட்சி இல்லை என்று ஆனபோது இப்பழக்கமும் நின்றுபோயிருக்கலாம்.

சிவராத்திரித் திருவிழா மூன்று நாட்கள் நடைபெறும். மூன்று நாட்களும் பல்வேறு இசைக் கருவிகள் முழங்க ஒவ்வொரு குலத்தாரும் தங்கள் குலத்துக்கே உரிய ஆடல், பாடல்களைச் சிறப்பாக அரங்கேற்றுவர். அட்டப்பாடியில் பழங்குடி இன மக்கள் சுமார் 154 ஊர்களில் வசிப்பதாகவும் எல்லா ஊர்களிலிருந்தும் மக்கள் இங்குவந்து இத்திருவிழாவில் கலந்து கொள்வதால் அட்டப்பாடி வட்டாரத்திலேயே இத்திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

விழாவில் இறுதி நாளன்று சிவபெருமான் மல்லனை மிகப் பெரிய ஒரு வில்லால் போர்க்களத்தில் வதைசெய்து, திரும்பி வரும் நிகழ்ச்சியினை நடத்துகின்றனர். அவ்வாறு வரும் சிவனை நடுவழியில் தேவி சென்று வரவேற்பாள். அந்தப் போரில் பயன்படுத்தப்பட்ட வில்லைக் கொண்டுவந்து தெய்வத்தின் முன் செங்குத்தாக நிறுத்தி வைப்பர். அதனை இரண்டு உதவியாளர்கள் சாய்ந்துவிடாமல் தாங்கிக் கொள்ள பூசாரி அதன்மீது ஏறி உதவியாளரின் தோளில் ஏறி நிற்பார். அவர் உடல் தலை முதல் பாதம் வரை நடுங்கத் தொடங்கும். சிவன் அவர் உடலில் புகுந்து விட்டான் என்பதற்கு இதுவே அடையாளமாகும். திருவிழாவில் கலந்துகொண்டவர்களுக்கு தெய்வஅருள் கிடைக்கும் நேரம் நெருங்கிவிட்டதெனக் கருதி அனைவரும் அமைதியாக நிற்பர். தெய்வம் ஏறிய குறும்பன் மறைபொருளாக ஒரு வாக்கியத்தைக் கூறுவார். இடி ஆகாயத்தில் முழங்குகின்றது

என்பதைப் போல அவ்வாக்கியம் கம்பீரமாக இருக்கும். அதனை உடனே எழுதிக் கொண்டு அடுத்து வரும் ஆண்டுகளில் மழை பெய்யும் என்று விளக்கம் கூறுவார் இவ்வாறு சிவனின் அருள் பெற்று கூறும் வாக்கு தெய்வ வாக்காகவே அவர்கள் கருதுகின்றனர். இதனைச் சிவபெருமானே நேரில் வந்து கூறும் வாக்காக எண்ணுகின்றனர். மல்லனைப் போரில் வென்றதால் சிவபெருமான் மல்லீஸ்வரன் எனப் பெயர் பெற்றார். எனவே செம்மண்ணூரில் குடிகொண்டிருக்கும் சிவபெருமானை மல்லீஸ்வரன் என்ற பெயரால் வழிபடுகின்றனர்.

## முடிவுரை

இங்ஙனம் கோயிலில்லாத ஊரில் குடியிருக்காதே என்ற பழமொழிக்கேற்ப தாம் வாழும் அனைத்து ஊர்களிலும் சிறுதெய்வங்களை நிலைக்கச் செய்தும், மனிதனுக்கு அப்பால் ஒரு சக்தி உண்டென்று கருதி அனைத்துத் தெய்வங்களையும் சமய வேறுபாடின்றிக் குறும்பர்கள் வழிபட்டு வருகிறார்கள் என்பதும் அவர்களின் தனித்தன்மையைக் காட்டுகிறது. இயற்கை வழிபாட்டிற்குக் குறும்பர் இன மக்கள் முதன்மையளித்தனர். மண்ணையும், பெண்ணையும் போற்றி வழிபடும் வழக்கம் இவ்வின மக்களிடம் காணப்படுகிறது. உழவுத் தொழிலையும், வேட்டையாடுதல், தேனெடுத்தல் ஆகியன இவ்வின மக்களின் முக்கியத் தொழில்களாகும். வனங்களின் சிறப்பை அறிந்து வனங்களையே தெய்வமாக வழிபடுதல், சிறு தெய்வம் மற்றும் பெருந்தெய்வ வழிபாடும் இவர்களியையே காணப்படுகிறது. எந்தச் சமயத்தையும் முதன்மைப்படுத்தாத நிலையை இவர்களிடம் காணமுடிகிறது. வஞ்சியம்மன் வழிபாட்டை, கண்ணகி வழிபாடாகவும் கூறுகின்றனர். இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை இவர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதே இவ்வின மக்களின் தனிச்சிறப்பு எனலாம்.

## References

Edgar Thurston, (2007) Castes and Tribes of South India, Volume IV, Cosmo publication, Delhi, India.

Elampuranar, (2009) Tholkappiyam Porulathikaram, Thirunelveli Thenindia Sivasiththantha Noorpathippuk kalakam Ltd, India.

Sakthivel, S., (2006) Naattuppura Ayiviyal, Manivasagar Publication, Chennai, India.

Ulagaveerappan, (2010) Puthuvai Makkalum Draupathi valippadum, Sethu publication, Puduchery, India.

Vengadachalam, Pulavar., (2007) Elangovadikkal Silappatikaram, pavai publication, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License